ஊராட்சிகள் திறமையாகவும் பொறுப்பாகவும் செயல்படுவதை ஊக்குவிக்கும் திட்டத்தின் கீழ் (Panchayat Empowerment and Accountability Incentive Scheme) 29 மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் 385 ஊராட்சி ஒன்றியக்குழு பெருந்தலைவர்கள் கணினி மற்றும் அச்சுப்பொறி வாங்கிட அனுமதித்தல்.

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பரா3) துறை

அரசு ஆணை (நிலை) எண்.9 நாள் 29.1.2009.

படிக்கப்பட்டவை:

1. மத்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் அமைச்சக கடித எண்.20011/16/2006– Pol II, நாள் 26.3.2007.
2. மத்திய அரசின் பஞ்சாயத்து ராஜ் அமைச்சக கடித எண்.20011/16/2006 – Pol II, Vol III, நாள் 31.3.2008.
3. ஊரக வளர்ச்சி ஆணையரின் கடித எண்.51218/08/பராI-1, நாள் 8.9.2008.

----

**ஆணை:**

மேலே ஒன்று மற்றும் இரண்டில் படிக்கப்பட்ட கடிதங்களில், ஊராட்சிகள் திறமையாகவும் பொறுப்பாகவும் செயல்படுவதை ஊக்குவிக்கும் (Panchayat Empowerment and Accountability Incentive Scheme) திட்டத்தின் கீழ், மத்திய அரசானது தமிழ்நாடு அரசுக்கு 2006–07ல் ரூ.82,64,000/–உம், 2007–08ல் ரூ.1 கோடியும் ஆக மொத்தம் ரூ.1,82,64,000/– (ரூபாய் ஒரு கோடியே எண்பத்திரண்டு இலட்சத்து அறுபத்தி நான்காயிரம் மட்டும்) வழங்கியுள்ளது.

2. மத்திய அரசு வழங்கியுள்ள மேற்காணும் தொகையான ரூ.1,82,64,000/–த்தில் கணினி மற்றும் அச்சுபொறிகள் வாங்கும் பொருட்டு அனுமதி வேண்டி மூன்றில் படிக்கப்பட்ட கடிதத்தில் அரசுக்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. மத்திய அரசு வழங்கியுள்ள இந்த ஊக்கத் தொகையான ரூ.1,82,64,000/– (ரூபாய் ஒரு கோடியே எண்பத்திரண்டு இலட்சத்து அறுபத்தி நான்காயிரம் மட்டும்) வரையறுக்கப்படாத நிதியாக (untied funds) அனுமதித்து அரசு ஆணையிடுகிறது. மேலும் இந்நிதியிலிருந்து, தளவாடங்கள் மற்றும் சாமான்கள் வழங்கும் இயக்குநரால் ஒப்புதல் அளிக்கப்பட்ட விலையான (DGS&D approved rate) ரூ.45,000/–க்கு (ரூபாய் நாற்பத்தைந்தாயிரம் மட்டும்) மிகைப்படாமல் ஒரு கணினி மற்றும் அச்சுப்பொறி வீதம் 29 மாவட்ட ஊராட்சித் தலைவர்கள் மற்றும் 385 ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர்கள் பயன்பாட்டிற்காக மொத்தம் 414 கணினிகள் மற்றும் அச்சுப் பொறிகளை வாங்குவதற்கு பயன்படுத்தலாம் என ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

4. மேலே பத்தி இரண்டில் ஒப்பளிக்கப்பட்ட தொகையானது கீழ்க்காணும் புதிய கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும் எனவும் ஆணையிடப்படுகிறது:

2515 00 Other Rural Development Programmes 101 Panchayat Raj Schemes in the Eleventh Five Year Plan-III Centrally Sponsored Schemes SA Grants under the Panchayat Empowerment and Accountability Incentive Scheme (PEAIS)09- Grants in aid 03—Grants for Specific Schemes (DPC 2515 00 101 SA 0930)

**5.** இப்புதிய கணக்குத் தலைப்பிற்கு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அவர்கள் கணக்கீடு நேர்செய்தல் மற்றும் கட்டுப்பாடு அதிகாரியாக இருப்பார். சார்ந்த சம்பளக் கணக்கு அலுவலர் / கருவூலக் கணக்கு அலுவலர் இப்புதிய கணக்குத் தலைப்பினை தமது புத்தகங்களில் துவக்கிட கோரப்படுகிறார்.

**6.** இது ஒரு 'புதுப்பணி' (New Service) குறித்த செலவினமாகும். இச்செலவினத்திற்காக சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் நாளடைவில் பெறப்படும். சுட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பெறப்படுவதை எதிர்நோக்கி, இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவு நிதியில் இருந்து மேற்கொள்ளப்படும். இதற்கான ஆணை நிதி (BGI) துறையால் தனியே வெளியிடப்படும். எதிர்பாராச் செலவு நிதியில் இருந்து இச்செலவினத்திற்கான தொகையைப் பெறுவதற்கு வரையறுக்கப்பட்ட படிவத்தில் நிதி (BGI) துறைக்கு இவ்வரசாணையின் நகலுடன் இரண்டு படிகளில் விண்ணப்பிக்குமாறு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். இச் செலவினத்தை 2008–2009–ம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்த்திட உரிய கருத்துருக்களை உரிய காலத்தில் அரசுக்கு தவறாது அனுப்பி வைக்கும்படியும் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

7. இவ்வாணையானது நிதித்துறையின் அலுவல் சாரா குறிப்பு எண். 529/RD/08 நாள் 23.1.09 மூலம் ஒப்புதல் பெறப்பட்டு வெளியிடப்படுகிறது. இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1566. (ஆயிரத்து ஐந்நூற்று அறுபத்து ஆறு)

(ஆளுநரின் ஆணைப்படி)

**க. அஷோக் வர்தன் ஷெட்டி,**
அரசு முதன்மைச் செயலாளர்.